பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

நாள் : 11.09.2017

# தமிழக அரசின் கல்வித் திட்டங்களால் சென்னைப் பள்ளிகளின் கல்வித்தரம் அபரிதமான வளர்ச்சி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இளைஞர்களே வருங்கால தூண்கள் என்பதனையும், வளமான அறிவுள்ள திறமையான மனித வளத்தினை உருவாக்கிடவும், தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக இருந்திட வேண்டும் என்பதற்காகவும், தமிழகத்தில் மட்டுமில்லாமல் உலக அளவில் வேலைவாய்ப்பினை பெறும்பொருட்டும், அனைத்து மாணவ, மாணவியர்களும் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வு இன்றி தரமான கல்வியை பெற்றிட வேண்டும் என்பதற்காக, கல்வித்துறையில் பல்வேறு புதுமைகளை ஏற்படுத்தி தொலைநோக்கு பார்வையோடு பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்திட உத்தரவிட்டதன் அடிப்படையில் தமிழகம் கல்வித்துறையில் இந்திய அளவில் முன்னேறிய மாநிலமாக திகழ்கிறது.

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை”

என்ற திருவள்ளுவர் அவர்களின் வாக்கிற்கிணங்க, ஒரு மனிதனுக்கு மற்ற செல்வங்களை விட சிறந்த செல்வம் கல்வியே ஆகும். மேலும், ஒரு மனிதனை நல்லவனாகவும், பண்புள்ளவனாகவும், அறிவார்ந்த மற்றும் மனிதாபிமானமுள்ள சிறந்த மனித சமுதாயத்தை உருவாக்குவது சிறந்த கல்வி முறையே ஆகும். அத்தகைய சிறந்த கல்வியினை தமிழக மாணவ, மாணவியர்கள் பெற வேண்டும் என்ற உயர்ந்த இலட்சிய நோக்கத்தினால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக அரசின் நிதி ஒதுக்கீட்டில் நான்கில் ஒரு பங்கு நிதியினை கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்து, பல்வேறு தொலைநோக்கு திட்டங்களை ஏற்படுத்தி பல்வேறு பகுப்பாய்வின் மூலம் சிறப்பான முறையில் செயல்படுத்திட வழிவகை ஏற்படுத்தினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 32 மேல்நிலைப்பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 119 தொடக்கப் பள்ளிகள் என மொத்தம் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 200 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.



பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பில் பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி மாணவ, மாணவியர்கள் கல்வி கற்றிடவும், அனைவரும் சமம் என்ற நிலையில் கல்வி கற்கும் சூழ்நிலையை ஏற்படுத்திடவும், அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திட பல்வேறு சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

பள்ளி துவங்கும் நாளில் மாணவர்களுக்கு மகிழ்ச்சியான சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு, பள்ளிகளில் வாழைக்கன்று, பலூன் மற்றும் மாவிலை தோரணம் கட்டி, மாணவ, மாணவியர்களுக்கு இனிப்புகள், எழுதுப் பொருட்கள் மற்றும் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகிறது.

மாணவ, மாணவியர்களுக்கு எவ்வித கவனச்சிதறல் மற்றும் இடையூறு ஏற்படாமல் கல்வி கற்றிடும் வகையிலும், மின்வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்கள் பள்ளிகளுக்கு எளிதில் சென்றுவர சாய்தள வசதி போன்றவை அனைத்து பள்ளிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாணவ, மாணவியர்களின் கற்கும் சூழ்நிலையை கண்காணிப்பதற்காகவும், அவர்கள் பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டும், சென்னைப் பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, மாணவர்களின் நலனில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக, 14 சென்னைப் பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அனைத்து சென்னைப் பள்ளிகளிலும் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவ/மாணவியரின் உலகப் பொது அறிவு மேம்படவும், அன்றாட நிகழ்வுகள் பற்றிய அறிவு பெறவும், ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி நாளேடுகள் அனைத்து சென்னைப் பள்ளிகளிலும் காலையில் வழங்கப்படுகின்றன.

கேட்பதை விட கண்ணால் காணும் போது கற்பது மனதில் நீடித்து நிலைக்கும் என்பதற்காகவும், திரையின் மூலம் தொழில்நுட்பம் வழியாக பாடங்கள் கற்பிக்கப்படும்போது அது மாணவர்களை ஈர்க்க முடியும் என்பதற்காகவும், மாணவ / மாணவியர்களின் கல்விக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் வளவகுப்பறைகள் **(Smart Class)** 74 சென்னைப் பள்ளிகளில் அமைக்கப்பட்டு 43,000 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் அரசு பொதுத்தேர்வினை எளிதாக எதிர்கொள்ளும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் சிறப்பு கையேடுகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வழங்கப்பட்டு வருகிறது. அதில் 10ம் வகுப்பில் 6,302 மாணவ, மாணவியர்களுக்கும், 12ம் வகுப்பில் 6,423 மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 12,725 மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது.

2016–2017–ஆம் கல்வி ஆண்டில் நடைபெற்ற 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 2580 மாணவர்கள், 3843 மாணவியர்கள் என மொத்தம் 6423 மாணவ / மாணவியர்கள் தேர்வு எழுதினர். அதில் 2085 மாணவர்கள், 3615 மாணவியர்கள் என மொத்தம் 5700 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 88.7 ஆகும். இதுகடந்த ஆண்டை விட 2.5 சதவீதம் கூடுதல் ஆகும். 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 3,028 மாணவர்கள், 3,274 மாணவியர்கள் என மொத்தம் 6,302 மாணவ / மாணவியர்கள் தேர்வு எழுதினர். அதில் 2,697 மாணவர்களும், 3,168 மாணவியர்களும் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதம் **93.1 %** ஆகும்.

சென்னைப் பள்ளிகளில் அதிக மதிப்பெண்கள் பெறும்பொருட்டு 10 மற்றும் 12–ம் வகுப்பு பயிலும் சிறந்த மாணாக்கர்களை தேர்வு செய்து, அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் 2 அம்மா உண்டு உறைவிட பள்ளிகளில் தங்க வைத்து, சிறந்த ஆசிரியர்களை கொண்டு **SPARK**

**GIFTED AND TALENTED** என்ற திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய மாணவ, மாணவியர்களுக்கு **SPARK CHALLENGERS** என்ற திட்டத்தின் கீழ் காலை நேர சிற்றுண்டி வழங்கப்பட்டு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பாடவாரியாக 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.1000மும், 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 400 மதிப்பெண்களுக்கு மேல், 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 1000 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.1,500/—மும் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளி வாரியாக 10 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் பாடங்கள் வாரியாக 100 சதவீதம் மதிப்பெண்கள் பெற வைத்த ஆசிரியர்களுக்கு தலா ரூ.1500/— மதிப்பிலான ரொக்கப்பரிசும், 10 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெறும் பள்ளிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலை படிப்போடு பொருளாதார சூழ்நிலைகளால் உயர்கல்வி கற்க முடியாத சூழ்நிலையை தவிர்ப்பதற்காகவும், சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் வெற்றி பெற்று பொறியியல், மருத்துவப் படிப்பு, கலை மற்றும் அறிவியல், ஆசிரியர் பயிற்சி, செவிலியர், சட்டம் போன்ற அனைத்து மேல்படிப்புகளுக்கும், அவர்கள் படித்து முடிக்கும் காலம் வரை ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், 2011—2017 வரை மருத்துவம் மற்றும் பொறியியல் துறை படிப்பிற்கு ஆண்டிற்கு தலா ரூ.45,000/— வீதம் 511 மாணவர்களுக்கு ரூ.2,29,95000/—மும், செவிலியர், ஆசிரியர் மற்றும் சட்டப் படிப்பிற்கு தலா ரூ.10,000/— வீதம் 155 மாணவர்களுக்கு ரூ.15,50,000/—மும், கலை மற்றும் அறிவியல், பட்டயப் படிப்பிற்கு தலா ரூ.7,000/— வீதம் 902 மாணவர்களுக்கு ரூ.63,14,000/—மும், பிற துறை படிப்பிற்கு தலா ரூ.25,000/— வீதம் 2 மாணவர்களுக்கு ரூ.50,000 என மொத்தம் 1570 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3.09 கோடி மதிப்பிலான ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் படித்த ஏழை, எளிய பட்டம் பெற்ற இளைஞர்கள், மாணவர்களின் கல்வி மேம்பாடு, வேலைவாய்ப்பு, அகில இந்திய/மாநில அளவிலான பல வேலைவாய்ப்புகள் மற்றும் உயர்கல்விக்கான போட்டித் தேர்வுகள் எழுதிடவும், அப்பகுதியின் பட்டம் பெற்ற இளைஞர்கள், மாணவர்களின் தகுதிக்கேற்றவாறு தனியார் நிறுவனத்துடன் இணைந்து பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே 21ம் நூற்றாண்டு திறன்களான (21st Century Skills) தலைமைப் பண்பு, சிக்கலான சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் திறமை, டிஜிட்டல் எழுத்தறிவு, பாலின சமபங்கு, அறிவாற்றல் திறன்கள் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் போன்றவற்றை வளர்ப்பதற்காக பிரிட்டிஷ் கவுன்சில் என்ற நிறுவனத்துடன் இணைந்து புதுமைப் பள்ளி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



பள்ளி மாணவ, மாணவியர்களின் தனித்திறனை வெளிக்கொணர்வதற்காக பல்வேறு போட்டிகள் நடத்தி அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2016–2017 கல்வியாண்டு முதல் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவியர்கள் கல்விச்சுற்றுலாவாக தனியார் நிறுவனங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு அழைத்து செல்லப்பட்டு வருகின்றனர். இதன் அடிப்படையில் கடந்த கல்வியாண்டில் ஏழு மாணவர்கள் மலேசியாவுக்கு அழைத்து செல்லப்பட்டனர். தற்போது ஏழு மாணவர்கள் ஜெர்மனிக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். இதன்மூலம் மாணவ, மாணவியர்கள் தங்களது திறனை வளர்த்து கொண்டு எதிர்கால வாழ்வினை சிறப்பான முறையில் ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

மாணவ, மாணவியர்களுக்கு கல்வியை மட்டும் கொடுப்பதுடன் நின்று விடாமல் மனஉறுதியை பெற ஒவ்வொரு ஆண்டும் யோகா, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி ஊக்கப்படுத்தி, மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களை தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க பயிற்சி வழங்கப்படுகிறது.

ஏழை எளிய மாணவர்களும் கல்வி கற்கும் வகையில் அனைத்து வகையான கல்வி உபகரணங்கள் (சீருடை, கிரயான்ஸ், பாடப்புத்தகங்கள், நோட்டுகள் மற்றும் புத்தகப்பை போன்ற உபகரணங்கள்) வழங்கிட உத்தரவிட்டதின் அடிப்படையில், அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஏழை, எளிய மாணவர்கள் உலகளாவிய அறிவினை பெறுவதற்கும், நடப்பு நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்காகவும், போட்டித் தேர்விற்கு தங்களை தயார் செய்து கொள்ளும் பொருட்டு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கிட தமிழக அரசு உத்தரவிட்டதின் அடிப்படையில், 2011–2012ல் 6475 மாணவ, மாணவியர்களுக்கும், 2012–2013ல் 6498 மாணவ, மாணவியர்களுக்கும், 2013–2014ல் 6285 மாணவ, மாணவியர்களுக்கும், 2014–2015ல் 6174 மாணவ, மாணவியர்களுக்கும், 2015–2016ல் 6052 மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 31,484 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் மூலம் சிறப்பு வகுப்புகளுக்கு எளிதில் சென்று வரவும், குறித்த நேரத்தில் பள்ளிக்கு செல்லவும், அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்காகவும் மேல்நிலை முதலாமாண்டு மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் 2011–2012ல் 6498 மாணவ, மாணவியர்களுக்கும், 2012–2013ல் 6285 மாணவ, மாணவியர்களுக்கும், 2013–2014ல் 6174 மாணவ, மாணவியர்களுக்கும், 2014–2015ல் 6549 மாணவ, மாணவியர்களுக்கும், 2015–2016ல் 6461 மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 31,967 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் செயற்கரிய செயல்திட்டங்களால் சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்களின் கல்வித்திறன் அபரிதமான வளர்ச்சி கண்டுள்ளது என்பது குன்றின் மீது விளக்காக விளங்குகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**